**ஏப்ரல் - 3**

**"இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்." - ரோம 13 : 12**

அந்தகாரத்தின் கிரியைகள், மிகவும் விரிவான விசாரணைக்கு நில்லாததும், புதிய நேமகத்தின் வெளிச்சத்தில் அங்கீகரிக்கப்பட மாட்டாததுமான, ஏதாகிலும் கிரியைகளாக இருக்கும். நாம் பழைய நேமகத்துக்குரியவர்களல்ல என்றும், நாம் புதிய நேமகத்துக்குரியவர்கள் என்றும் ஞாபகத்தில் வைப்போமாக. ஆகையால், அந்தகாரத்தின் பிரபுவுக்கும் அவனுடைய வேலைகளுக்கும், அவனுடைய வழிகளுக்கும் எதிரிடையாக நமது பட்டணவாச உரிமையின் படியும், ஒளியின் பிரபுவினிடத்தில் நமக்கிருக்கும் பொறுப்பின் படியும் ஜீவிக்க வேண்டும். **- Z'03, 122 (R 3181).**

இவ்வுலகில் சாத்தானுடைய தீங்கான ஆட்சியின் இரவு ஏறக்குறைய முடிந்து விட்டது. கிறிஸ்துவினுடைய சந்தோஷமுள்ள ஆட்சியின் நாள் சமீபமாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்களாக எதிராளியின் ஆவியில் கறைபடுத்தப்பட்ட ஏதாவதொரு வேலையையும் எல்லா வேலைகளையும் அல்லது சுபாவத்தை நாம் எரிந்து விட்டு, எல்லா சத்தியத்தையும் கர்த்தரின் ஆவியின் கிருபையையும் ஆயுதங்களாகத் தரித்துக் கொள்ளக் கடவோம். இவ்விதமாக தெய்வீக இஷ்டத்துக்குத் தேவனுடைய இராஜ்யத்தில் நமது பட்டணவாச உரிமை தகுதியாய் நிரூபிக்கப்பட்டு, நமது இராஜ்யப்பற்று சிறப்பாகத் தெள்ளெனக் காண்பிக்கப்படும். **-P '30, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 6:5,11; 8:21; சங் 51:5; நீதி 20:9; பிர 7:20; ஏசா 1:5,6; 51:1; 64:6; எரே 17:9; மத் 7:17; 15:19; யோவா 3:19; ரோம 1:21-32; 3:9-19,23; 6:6,19,20; கலா 5:17,19-21; எபே 4:17-22; 5:11; கொலோ 3:8; எபே 6:12-18; 1தெச 5:8; யோவா 3:21; 15:2-8; 2கொரி 9:8; கலா 6:4,7-9.

**கோபுர வாசிப்பு : Z '15, 280 (R 5768).**

**வினாக்கள் :** இந்த வாரம் தீமையை விட்டுவிட்டு நன்மையைச் செய்திருக்கின்றேனா? எப்படி? எது உதவியாயிருந்தது அல்லது இடையூறாக இருந்தது? பலன்கள் என்ன?